இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 | இதழ்: 12 | பக்கங்கள்: 08 | திகதி 08-07-2012 | விலை: 15.00

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

# மட்டக்களப்பு புதிய மறைமாவட்டமாக மலர்கின்றது

கடந்த யூலை மாதம் 3ஆந் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இலங்கையில் மட்டக்களப்பு என்ற புதிய மறைமாவட்டத்தை உருவாக்கி அம்பாறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களை நியமித்துள்ளார்.



திருகோணமலை மட்டுநகர் மறைமாவட்டமானது கடந்த 117 வருடங்களாக ஓர் தனி மறைமாவட்டமாக செயற்பட்டு வந்தது. அதன் ஆயராக கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் செயற்பட்டு வந்தார். தற்போது திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து தனியாக பிரிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அடங்கும். பதினொரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்த மறைமாவட்ட பகுதியில் ஐம்பத்தையாயிரத்து இருநூற்றைம்பது கத்தோலிக்கர்கள் உள்னர். இருபத்தினான்கு பங்குத்தளங்களைத் தன்னகத்தே கொண்ட இப்புதிய மறைமாவட்டத்தின் முப்பத்தைந்து மறைமாவட்ட குருக்களும் தொண்ணூற்றேழு இருபால் துறவியரும் பணிசெய்கின்றனர். புதிய ஆயராகப் பொறுப்பேற்கும் ஜோசப் பொன்னையா ஆண்டகை 1952ஆம் ஆண்டு தன்னாமுனைப் பங்கில் பிறந்தார். 1980ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 2008ஆம் ஆண்டு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டுத் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராகத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களால் நியமிக்கப்பட்டார். புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயரான மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களையும் புதிய மறைமாவட்டத்தையும் பாதுகாவலன் வாழ்த்தி நிற்கின்றது.

## நாட்டுக்கூத்து நூல் வெளியீடு

பாஷையூர் புலவர் அமரர் மதுரகவி நீ. மிக்கோர் சிங்கம் எழுதிய கிறிஸ்தோப்பர் நாட்டுக்கூத்து நூல் வெளியீடு பாஷையூரில் கடந்த மாதம் நடைபெற்றது. அவரது பிள்ளைகளால் இந்நூல் வெளியீடு செய்யப்பட்டது.

பிரதம விருந்தினராக முன்னாள் யாழ். அரசஅதிபரும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளருமான திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நூல் ஆய்வுரையை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறை பேராசிரியர் அருட்திரு. ஞா. பிலேந்திரன் அடிகளார் தமது உரையில்: எமது கத்தோலிக்க



கலை இலக்கிய ஆவணங்கள் ஏட்டில் எழுதப்பட்டு பின் கையெழுத்து பிரதிகளானவை இவற்றை அச்சு வாகனமேற்றி பாதுகாப்பது இத்துறை சார்ந்தோரது கடமையாகும். இது படைப்புகளுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும் அரிய செயற்பாடாகும். இவ்வாறான படைப்புக்கள் ஆளுமை, சமூகபின்புலம், கலை, இறை பக்தி, தமிழ்ப்பற்று என்பவற்றை வளர்க்க உதவுகின்றன. இந்த நாட்டுக் கூத்துக் கலை கத்தோலிக்க விசுவாசத்தை பல தலைமுறைகளாக வளர்த்து வருவதை மறுக்க முடியாது. இப்புலவரது நான்காவது நாடகநூலையும் அவரது பிள்ளைகள் வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும் என்றார்.

## 125ஆவது ஆண்டில் காலடி வைக்கும் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்

சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான ஆலயம் 125ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ளது. இதனை நினைவு படுத்தும் வகையில் ஆலயத்திருவிழாவின் இறுதியில் ஆலய முன்றலில் நூற்றாண்டுக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.



எஸ். யேசுதாஸ்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை கொடியை ஏற்றி வைத்தார். 2013ஆம் ஆண்டு 125ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பளைப்பங்கிற்கான யாழ். ஆயரின் தரிசிப்பு

யாழ் ஆயர், மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் புலோப்பளைப் பங்கின் பல ஆலயங்களைத் தரிசித்து, பங்குத்தந்தையுடனும், பங்கு மக்களுடனும் கலந்துரையாடித் தமது அன்பையும் ஆசீரையும் வெளிப்படுத்தினார். போரினால் சிதைந்துபோன இத்தாவில் தூய பார்பிரா அம்மாள் ஆலயத்தினையும் அதன் புணர்நிர்மாணப் பணிகளையும் பார்வையிட்டார். மேலும் தூய பேதுருவானவர், மரியாள் ஆலயங்களையும் பார்வையிட்டார். அறத்திநகர் அல்லிப்பளையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் தூய குழந்தை இயேசு ஆலய கட்டுமாணப் பணிகளையும், ஆலய மக்களையும் பார்வையிட்டு அவர்களுக்காகச் செபித்தார். ஆயர் அவர்களின் வருகைக்காகவும், ஆசீருக்காகவும், பங்குத்தந்தையும் பங்கு மக்களும் நன்றி தெரிவித்தனர்.



## சக்கோட்டைப் பங்கின் மாபெரும் நற்கருணைப்பவனி

சக்கோட்டைப் பங்கின் கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா அன்று மாபெரும் நற்கருணைப்பவனி யொன்று இடம் பெற்றது மாலை 4.00 மணியளவில் சக்கோட்டை ஆலயத்தில் அலைதிரண்ட பங்கு மக்கள் அனைவரும் அருட்தந்தையர்களான வரதன் C.M.F தயாபரன் அடிகளாரால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப வழிபாடுகளோடு நற்கருணைப் பவனியில் இணைந்து கொண்டனர். புனித சவேரியார் ஆலயத்திலிருந்து கடற்கரை வீதியூடாகப் பவனியாகச் சென்று விசேடவிதமாகக் குறிக்கப்பட்ட இடங்களில்தரித்து நின்ற மக்கள் அருட்தந்தையர்கள் தயாபரன் வரதன் C.M.F அடிகளாரின் இறைவார்த்தையின் ஒளியில் கொடுக்கப்பட்ட மறையுரைகள் இன்னும் முன்னெடுக்கப்பட்ட வழிபாடுகள் இசைக்கபபட்ட பாடல்களோடு உணர்வு பூர்வமாக இணைந்து கொண்டவர்களாகப் பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தை வந்தடைந்தார்கள். நற்கருணை ஆண்டவரின் இறுதி ஆசீர் பொலிகண்டி குழந்தை யேசு ஆலய முன்றலில் அலைதிரண்ட மக்கள் கூட்டத்திற்கு அருட்தந்தை அகஸ்ரின் அடிகளால் வழங்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை வரதன் இன்றைய வாழ்வில் ஆட்டங்காணும் அர்ப்பண வாழ்வின் நிலையையும் அர்ப்பண வாழ்வு வாழப்பட வேண்டியதன் தேவையையும் அவசியத்தையும் மறையுரையிலே வலியுறுத்த அருட்தந்தை தயாபரன் அடிகளாரால் திருப்பலி தலைமையேற்று ஒப்புக் கொடுக்க திருவுடல் திருஇரத்தப் பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.

S. றில்டா - மறையாசிரியர்

# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## உலக சமூக தொடர்பு நாள்

புதிய தகவல் தொழில்நுட்பத்தில் தனக்குரிய அறிவையும் ஆற்றலையும் நன்கு வளர்த்து, அதனை நடைமுறைப்படுத்தி, இன்றைய உலகில் அனைவரும் கடவுளைத் தொட்டு உணரும் வகையில் அவரைப் பிரசன்னப்படுத்திட நமது வாழ்வு அமைந்திட வேண்டும். நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் வேளையில், ஒவ்வொருவரும் மாண்போடு நிகழ்காலத்தில் வாழ எடுக்கும் முயற்சிகளை ஊக்கப்படுத்தி, காலங்காலமாக காத்து வருகிற சமய ஞானத்தை பொக்கிஷமாக வழங்கிட கடவுளின் மனிதராக ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

சமூகத் தொடர்பிற்கான புதிய தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கிறிஸ்தவர்கள் திருச்சபையின் வாழ்வை மக்களுக்கு அறிமுகப்படுத்த முடியும்; கிறிஸ்துவின் அழகிய திருமுகத்தை நம் காலத்தவர் யாவரும் தரிசிக்க செய்ய முடியும்.

'இன்றைய தொழில்நுட்ப கண்டத்தில்' (Digital continent) தாய்த்திருச்சபை இவ்வழிமுறையில், 'கலாச்சாரத் திருத்தொண்டு' (Diaconia of Culture) ஆற்றிட முடியும். நற்செய்திதனை நம் கரங்களிலும் இதயங்களிலும் ஏந்தியுள்ள நிலையில், மனுவுருவான ஆண்டவரிடம் நம் அனைவரையும் கொண்டு சேர்க்கும் வழிகளைத் தொடர்ந்து உருவாக்குவதில் உறுதிப்பூண்டவர்களாக மிளிர வேண்டும். அதனைத்தேடி அடைந்திடத் துடிக்கும் அனைவர்மேலும் இடைவிடாமல் கவனமும் செலுத்திட வேண்டும். இத்தகவல் தொழில்நுட்ப உலகில் மேய்ப்புப்பணி நிலைகட்டாயம் தேவை. ஏனெனில் அது நம்மை பிற சமயங்களைப் பின்பற்றுபவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகிறது; கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களிடம், பல்வேறு கலாச்சாரங்களைப் பின்பற்றும் மக்களிடம் தொடர்பை ஏற்படுத்துகிறது. அதற்கு நம்பிக்கையற்றவர்களிடம், உடைந்த உள்ளத்தினரிடம், உண்மையை முழுமையைத் தேடுவதில் விவரிக்கமுடியாத அவா உள்ளவரிடம் நம்முடைய கரிசனையைக் காட்ட வேண்டும்; ஒவ்வொருவரும் இவ்வுலகைக் கூர்ந்து நோக்குதல் அவசியம். இறைவாக்கினர் எசாயா முன்னுரைத்தது போன்று 'என் இல்லம் மக்கள் அனைத்திற்கும் உள்ள இறைமன்றாட்டின் வீடாக, (எசா 56:7)' இன்றைய இணையத்தளத்தை எருசலேம் ஆலயத்தில் இருந்த 'பிற இனத்தாரின் முற்றமாக' ஏன் நாம் கருதக்கூடாது.

இப்புதிய தொழில்நுட்ப வளர்ச்சியும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப உலகமும் ஒட்டுமொத்த மானுடத்திற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் மிகப்பெரும் வளமாக, மிகப்பெரிய ஆதார மையமாக அமைகிறது; அது ஓர் ஊக்கியாக செயல்பட்டு, ஒருவர் மற்றவரைச் சந்திக்கவும் ஒருவர் மற்றவரோடு உரையாடவும் தூண்டுகிறது. இந்த அளவற்ற வளர்ச்சி இறைநம்பிக்கையாளர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பெயரால் இனி நாம் எந்தக் கதவையும் மூட முடியாது; ஒருவர் மற்றவரிடம் நெருங்கும் வகையில் அனைத்தும் அமைந்துள்ளன; **குறிப்பாக** கிறிஸ்தவர்களுக்கு இப்புதிய ஊடகம் புத்தம் புதிய, எக்காலத்திற்கும் தொடமுடியாத மேய்ப்புப்பணி வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சபையின் ஒப்புயர்வற்ற உலகளாவிய பணிக்கு ஒரு வடிவம் கொடுக்க அவர்களை ஊக்கு விக்கிறது. பரந்துபட்ட உண்மையான தோழமையை கட்டியெழுப்பத் தூண்டுகிறது; நம் மீட்புக்காக நம்மிடையே எழுந்தருளி வந்து, என்றென்றும் வாழும் இறைமகனான இயேசுவின் நற்செய்தியைக் கேட்பதால் பெறக்கூடிய புது வாழ்வை இவ்வுலகில் சோதித்தறிய அது நம்மைத் தூண்டுகிறது. அதேசமயம் கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்கிற பணியின் நற்பயன் முழுவதும் கிறிஸ்துவிடமிருந்தே வருகிறது என்பதையும் நாம் சிந்தையில் நிறுத்த வேண்டும்.

குறிப்பாக, நவீன சமூக தொடர்புச் சாதனங்கள் வழங்கியுள்ள சிறப்பான வாய்ப்புகளை அறிவார்ந்த முறையில் நன்கு பயன்படுத்திட உங்களை அன்புடன் அழைக்கின்றோம். வலைதல உலகம் (Cyber Space) உருவாக்கியுள்ள நெடுஞ்சாலையில் கிறிஸ்துவை பயணிக்க செய்து, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் ஊரிலும் நகரின் தெருக்களிலும் நம் இல்லத்திலும் ஏன்..நாம் கையாளும் நவீன தொழில்நுட்ப கருவிகள் வழியாகவும் நம்மை தேடுகிறார்...நம்மோடு உறவாடுகிறார்...நம்மில் தங்குகிறார் என்பதை உலகுக்குச் சொல்ல இத்தினம் உதவட்டும்.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

## இறை உணர்வையும், கலை உணர்வையும் வெளிக்கொணர்ந்த தூய இராயப்பர் ஆலய திருவிழா

மீள்குடியேற்றத்தின் மூன்று ஆண்டு நிறைவில், புலோப்பளை தூய இராயப்பர் ஆலய திருவிழா கடந்த 29ம் திகதி மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. 'எங்களோடு தங்கும் ஆண்டவரே' என்னும் கருப்பொருளில், இறைவனுக்கு நன்றி கூறியும் தொடர்ந்தும் இறைவனின் உடன் இருப்பை வேண்டியும் நற்கருணை வழிபாட்டினை புலோப்பளை தூய பேதுறுவானவர் ஆலய இளைஞர் யுவதிகள் சிறப்பித்தனர். இவ்வழிபாட்டினை அருட்பணி. பிராயன் அடிகளார் நெறிப்படுத்தினார்.



திருவிழாத் திருப்பலியினை அருட்பணி. அகஸரின் அடிகளார் ஒப்புக் கொடுத்தார். தூய பேதுறுவானவர் தமது விசுவாசத்தில் தளர்வு கண்டாலும், கிறிஸ்துவை மிக ஆழமாக அன்பு செய்து, கிறிஸ்துவிற்காகவே உயிர் துறந்தார் என அருட்பணி. பிராயன் தமது மறை உரையில் குறிப்பிட்டார். திருப்பலியில் பல குருக்களும், பல நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து சிறப்பித்தனர். திருச்சுருப பவனியின் பின்பு திருச்சுருப ஆசீரை பங்குத்தந்தை. அருட்பணி. ஜேம்ஸ்நாதன் வழங்கினார். திருவிழா அன்று மாலை பங்குமக்களாலும், இளைஞர், யுவதிகளாலும், பல கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. விவாதம், நடனம், கோலாட்டம், இசைப் பொழுது, மற்றும் காகித ஓடம் என்னும் நாடகமும் மேடையேற்றப்பட்டது. இந் நிகழ்ச்சிகளில் பலர் கலந்து பயன்பெற்றனர். இறை உணர்வும், கலை உணர்வும் கலந்து வெளிக்கொணர்ந்த ஒரு திருவிழாவாக இவ்விழா அமைந்திருந்தது.

## கிளி/முல்லை மறைக் கோட்டத்தில் மறையாசிரியர்களுக்கான புத்தூக்கப் பயிற்சி



**போ**ரினால் பாதிகபப்பட்ட, கிளி/முல்லை, மறைக்கோட்ட மறை ஆசிரியர்களின் எதிர்கால கற்பித்தல் நெறியினைக் கருத்தில் கொண்டு மேதகு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பணிப்பின் பேரில் யாழ். மறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் தந்தை அருட்பணி. அன்ரன் ஜோர்ச் அடிகளாரின் நெறிப்படுத்தலோடு கடந்த மே மாதம் 28ம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 7ம் திகதி வரை கிளி/கனகபுரம் பகுதியில், அமலமரித் தியாகிகளின் நிறுவனமான "ஒப்ரெக்" பணித்தளத்தில் கிளி/முல்லை மறைக் கோட்டத்தில் இருந்து பங்குத் தந்தையர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 மறை ஆசிரியர்கள் ஒன்று கூடினர்.

மாலை 5.00 மணிக்கு தொடங்கி வைக்கப்பட்ட ஆரம்ப நிகழ்வில் மறைக்கோட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. யாவிஸ் அடிகளார் அனைவரையும் வரவேற்று ஆசியுரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, யாழ். மறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் தந்தை அருட்பணி. அன்ரன் ஜோர்ச் அடிகளார் "உங்களோடு நாம் இருக்கின்றோம்" உங்களது பணிகளில் நாம் துணை நிற்க உங்களைத் தேடி வந்திருக்கின்றோம் உங்களது பணிவாழ்வு திருச்சபைக்கு அத்தியாவசியமானது என்பதால் உங்களை நல்லதொரு மறை ஆசிரியர்களாக உருவாக்க ஆயரின் பணிப்புரையின் மீது குறுகிய காலத்திலும் நிறைவான பயிற்சிகளை வழங்க, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின விரிவுரையாளர்களையும், யாழ். மறைமாவட்டத்தில் நிரந்தர மறை ஆசிரியர்களாகப் பணியாற்றும் அனைவரோடு, உங்கள் மறைக் கோட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களையும் இணைத்து இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளோம் என்றார்.

கடந்த 10 நாட்களிலும் இடம்பெற்ற கருத்தமர்வில் பங்குபற்றியோர்களுக்கான வதிவிடங்கள் வசதிகளையும், உணவுத் தேவைகளையும், "ஆரோபணம் இளைஞர் இல்லத்தின் இயக்குனர் அருட்பணி. கான்ஸ்போவர் அடிகளார் கவனத்தில் எடுக்க, மறை ஆசிரியர்களின் இல்லக் காப்பாளர் செல்வி. அ.பிலோமினா முன்னெடுக்க, நிரந்தர மறைஆசிரியர். திரு.ச. ஆரோக்கியநாதர் அவர்கள் நிர்வாகக் கட்டமைப்புகளையும், காலை, மாலை வழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு பாட ஒழுங்குகளையும் எம்மோடு தங்கியிருந்து நெறிப்படுத்தினார்!

எமது மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் தமது சிரமத்தை பாராது அடிக்கடி எம்மைத் தேடி வருவதும் "திருப்பாடல்" நூலை விரிவு படுத்தி விளக்கம் அளித்ததும் எமது தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து அனைவரையும் மகிழ்வித்ததும் ஒரு தந்தை போன்று இயங்கியதும் எம்மால் மறக்க முடியாது.

பயிற்சி நிறைவு நாளான ஜூன் 7ம் திகதி நன்றித் திருப்பலியின் பின்னராக, மறைக் கோட்டக் குருமுதல்வரின் தலைமையில் யாழ். மறைக் கல்வி இயக்குனருடன், வன்னி மறைக் கோட்ட மறைக்கல்வி தொடர்பாளர் அருட்பணி. அருட்செல்வன் அடிகளாரோடு இணைந்து கிளி/முல்லை மறைக் கோட்டத்தில் பணியாற்றும் அனைத்து அருட்பணியாளர்களும் கலந்து பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகளிலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு, பங்குபற்றிய மறை ஆசிரியர்களைக் கௌரவித்தனர். அவர்களது குறுகிய காலப் பயிற்சிக்கு ஒத்துழைத்த அனைவரும் எமது மறைக் கோட்டத்தில் பாராட்டப்பட வேண்டியவர்களே. இவர்களுக்கான தொடர் பயிற்சி எமது மறைக் கோட்டத்தில் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட எங்களின் பெருவிருப்பமாகும்.

*ச. றஞ்சி*
*(பயிற்சி ஆசிரியர்களின் பொறுப்பாளர்)*

# என்றும் நான் உன்னோடு இருக்கின்றேன்

o தனிமையில் நீ வாடும்போது, உன்னோடு நான் இருக்கின்றேன்

o திகைப்புற்றுக் நீ கலங்கும்போது, நான் உன்னோடு இருக்கின்றேன்

o மற்றவர்கள் உன்னை வெறுத்து ஒதுக்கும்போது, உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன் வாழ்வில் எந்தவித முன்னேற்றத்தையும் நீ காணாதிருக்கும் போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o நம்பிக்கை இழந்து நீ சோகத்தில் மூழ்கியிருக்கும்போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o அச்சத்தோடு நீ பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன்னை எவரும் விரும்பாதிருக்கும் போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o உனக்கும் நண்பர்களுக்குமிடையே தடைச்சுவர்கள் எழும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o கவலையினாலே நீ நித்திரையின்றித் தவிக்கும்போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன் மனதை எவராவது புண்படுத்தும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o பெரும் ஆபத்து உன்னைச் சூழும் போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன் உடல்நலம் குன்றி உனக்கு உதவி தேவைப்படும்பேரது நான் உன்னோடு இருக்கின்றேன்



o உன் வேதனைகளை நீ சுமக்க முடியாதபோது துவளும் போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன் வாழ்வு தகர்ந்து சிதறி விழும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o உனக்கு அன்பு தேவைப் பட்டு உன் மனதிலுள்ளதைப் பகிர நீ முயலும் போது உனனோடு நான் இருக்கினறேன்

o பெருந்துயரால் நீ துன்புற்று வருந்தும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன் கதைக்குச் செவிசாய்க்க ஒருவர் கூட உனக்கு இல்லாதபோது உன்னோடு நான் இருக்கின்றேன்

o களைப்பினால் சோர்வுற்று நீ தள்ளாடித் தடுமாறும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன் மனச்சாட்சி உன்னை குற்றம் சாட்டிக் கத்தும்போது, உன்னோடு நான் இருக்கின்றேன்

o என்னை நோக்கி நீ அபயக் குரல் எழுப்பும்போது நான் உன்னோடு இருக்கின்றேன்

o நீ செத்துக் கொண்டிருக்கும் போது உன்னோடு நான் இருக்கின்றேன்

o ஆபத்துகளில் காக்கும் நற்சமனைசைப்போல நான் உன்னோடு இருக்கின்றேன்

o இதத்தோடு அகமகிழ்வும் அள்ளிக் கொடுக்கும் சூரியன்போல உன்னோடு நான் இருக்கின்றேன்

o பாதுகாப்புணர்வை வாரி வழங்கும் தந்தைபோல நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன் உணர்வுகள் ஒவ்வொன்றையும் தானும் உணரும் அன்புத் தாய் போல உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன்னுள் இருந்து என்றும் இயங்கும் உன் இதயம்போல நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன்னை என்றும் பார்த்துக் கொண்டேயிருக்கும் கண்களைப்போல உன்னோடு நான் இருக்கின்றேன்

o உனக்கு என்றும் ஆதரவளிக்கும் உன் கரங்களைப்போல நான் உன்னோடு இருக்கின்றேன்

o உன்னைச் சூழும் வெண்முகில் போல உன்னோடு நானும் இருக்கின்றேன்

o சரியான பாதையைச் சுட்டிக் காட்டுகின்ற நல்ல கரம்போல நான் உன்னோடு இருக்கின்றேன்

o உனக்குப் புத்தெளுச்சி ஊட்டும் ஒளிக்கதிர்கள்போல உன்னோடு நான் இருக்கின்றேன்

o உன்னோடு பேசுகின்ற அன்பின் குரலாக என்றும் நான் உன்னோடு இருக்கின்றேன்.


ஆம் நான் என்றும் உன்னோடு இருப்பேன்

(எழுதியவரை அறியோம்)

(காண்: John Fuellenbach. Proclaiming His Kingdom: Meditations for Personal Reflection.1994.27-28)

தமிழாக்கம்: அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்

# மக்களுக்கு வாழ்வளித்த மருதநிலம் மறுபடியும் புத்துயிர் பெறாதோ?



ஜெயம்ஜெகன்
பல்கலைக்கழகம் யாழ்.

மொட்டைத்தலையிலே ஆங்காங்கே முளைத்திருக்கும் ஓரிரு வெள்ளை மயிர்கள் போன்று மருதங்கேணி நிலத்திலும் ஓரிரு குடியிருப்புக்கள் காட்சியளித்தன.

கண்ணீருக்குச் சொந்தமான பலர் கைவிரித்து கண்ணீரில் நீந்திக் கொண்டிருக்கையிலே சட்டென என் கால்கள் அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்தது: அம்மா வணக்கம் நான் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வருகின்றேன். சற்று நில்லுங்கள் என்றேன். உடனே அத்தாயார் என்ன சொல்லுங்கோ என்றார். நான் கேட்ட கேள்வியில் அத்தாயின் கண்கள் பலநிமிடங்கள் குளங்களாயின. ஆயினும் கோடையிலே வற்றும் நீரோடை போல் எனது சில ஆறுதல் வார்த்தையால் அவளின் கண்களில் இருந்த நீரும் வற்றியது. கண்ணீருக்கு காரணம் இதோ "எனது பெயர் சின்னப்பிள்ளை வயது 65 எனது கணவனார் இறந்துவிட்டார். எனக்கு ஒரே மகள் அந்த மகளின் கணவனும் (மருமகனும்) போரிலே இறந்துவிட்டார். என்று வெதும்பிக் கொண்டாள் ஆண்கள் துணையற்ற அவள்."

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளதே மருதங்கேணி. ஒரு கேணியைச் சுற்றி பல மருதமரங்கள் வளர்ந்திருந்தபடியால் இன்று மருதங்கேணி என்று புழக்கத்திலிருந்து வார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஜே 428 இலக்கத்தைக் கொண்ட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட இப்பிரதேசத்தில் 200 குடும்பங்களைக் கொண்ட 900 எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்றார்கள். இம் மக்களின் பாரம்பரிய வாழ்க்கைத் தொழிலாக மீன் பிடித்தல் உள்ளது. இம்மக்கள் தூண்டில், நீச்சுவலை, கட்டுமரம், கரைவலை, படகு, வள்ளம் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தி பெருமளவான மீன்களைப் பிடிக்கின்றார்கள். ஒரு அபிவிருத்தி அடைந்த கிராமம் எவ்வாறான வசதிகளைக் கொண்டிருக்க வேண்டுமோ அவையனைத்தையும் கொண்டிருந்தது மருதங்கேணி. எடுத்துக்காட்டாக கோயில்கள், பாடசாலை, வைத்தியசாலை, சனசமூக நிலையங்கள், பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம், சந்தைகள், விளையாட்டு மைதானங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் மூன்று வருடங்களுக்கு முன்பு கொண்டிருந்தது.

இங்கு இயற்கையாகவே வளர்ந்த பல அரிய வகை மரங்களும் (நாவல், உயில், ஈச்சை, காட்டுநெல்லி) பெறுமதிமிக்க பாலை, வேம்பு, வீரை, மலைவேம்பு, மருதமரம், பழைமையான ஆலயம், அரசமரம் மற்றும் ஏனைய மரங்களும் வளர்ந்து செழித்து நின்றது. மருதங்கேணியில் கல்விச் சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்காக இந்து தமிழ் கலவன் பாடசாலையே உள்ளது. இங்கு மருதங்கேணியைச் சேர்ந்த மாணவர்களுடன் ஏனைய ஊரைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். இங்கு 573 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 23 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.

மருத நிலத்தின் அருமைகளையும் பெருமைகளையும் சீரழிக்கும் வகையில் பெரும் அசௌகரியங்கள் நடந்தேறியுள்ளன. குறிப்பாக உள்நாட்டு யுத்தம், சுனாமி என்பவை முக்கியமாக பதிவாகியுள்ளது. முப்பத்து மூன்று வருடமாக இடம் பெற்ற உள்நாட்டுப் போரில் கடத்தல்கள், காணாமல் போதல், உடல் உயிர் பொருள் வீடுகள் காணிகள் சொத்துக்கள் பயன்தரு மரங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன. 1990, 1992, 1996, 2000ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் மக்கள் நொந்து நூடில்ஸ் ஆகினர். காயப்பட்ட மனிதனுக்கு ஒத்தடம் போடவேண்டிய அரசாங்கம் பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் செயற்பட்டு வருவது அம்மக்களின் வெந்த புண்ணில் குடியிருக்கும் நிலைமையானது. 1990 தொடக்கம் 2012 வரையான 22 வருட காலப்பகுதியில் 12 வருடங்கள் மட்டுமே தமது சொந்த நிலத்தில் குடியிருந்தமை "அழுகின்ற கண்ணராகி அநுமன் கொல்" என்ற அங்கதன் தூதுப்படலத்திற்கு ஒத்ததாய் உள்ளது.

செல்வீச்சுகளும், விமானக் குண்டுவீச்சுகளும், கடலிலும் தரையிலும் மேற்கொள்ளப்படும் கடற்படைத் தாக்குதல்களும் பழகிப் போன ஒன்றானதுடன் பாடமாற்றத்திற்கு பாடசாலையில் அடிக்கும் மணிபோல் பதிவாகி விட்டது. இதனால் பல அநாதைப் பிள்ளைகள், விதவைகள் உருவாக்கப்பட்டு கூனிக்குறுகிக்கிடக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் காரணமாக கடற்கரையிலிருந்து 750 மீற்றர் வரையான பிரதேசம் இருந்த இடம் தெரியாமல் முற்றாக அழிக்கப்பட்டது. இன்று கடற்கரையிலிருந்து 300மீற்றர் உள்ளே தள்ளியே குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். ஏனெனில் மீண்டும் இவ்வாறான சுனாமி அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்காக மருதங்கேணியின் மத்தியில் உள்ள காட்டுப்பகுதி அழிக்கப்பட்டு அங்கு மக்களுக்கான குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 5ம் பக்கம்..)

# 46வது உலக தொடர்பாடல் தினத்திற்கான திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் செய்தி

## வார்த்தையும், நிசப்தமும்: மறைத்தூதின் பாதை

அன்பின் சகோதர சகோதரிகளே,

இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டின் உலக தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு மானிட தொடர்பாடல் செயற்பாங்கின் தோற்றப்பாடு தொடர்பான சில ஆழமான சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசிக்கின்றேன். தொடர்பாடலானது முக்கியத்துவம் வாய்ந்திருந்த போதிலும் அடிக்கடி கவனத்திற் கொள்ளத் தவறப்படும் ஒன்றாகவும், தற்போது மீண்டும் நினைவிற் கொண்டுவர வேண்டிய அவசியம் உள்ள ஒன்றாகவும் காணப்படுகிறது.

தொடர்பாடலானது வார்த்தைக்கும், நிசப்தத்திற்குமிடையிலான தொடர்பினை கருதி நிற்கின்றது. தொடர்பாடலின் இரு முக்கிய அம்சங்களான வார்த்தையும், நிசப்தமும் சமநிலையில் கொள்ளப்பட வேண்டியவை. மக்களிடையே ஆழ்ந்த பிணைப்பும் நம்பகமான உரையாடலும் எட்டப்பட வேண்டின் இவை ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட வேண்டும். ஒன்று மாற்றி ஒன்றாக தொடர வேண்டும். வார்த்தையும், நிசப்தமும் பரஸ்பரம் ஒன்றையொன்று ஒதுக்கித்தள்ளும் பண்புடயனவாக மாறும் போது தொடர்பாடல் அறுந்துபோகின்றது அல்லது செயலிழந்து போகின்றது. இது ஒன்றில் குழப்பத்திற்கு இடமளிக்கின்றது அல்லது உயிரோட்டமற்ற ஓர் உணர்வு நிலையைத் தோற்றுவிக்கிறது. இரண்டும் ஒன்றையொன்று நிறைவு செய்யும்போது தொடர்பாடலானது பெறுமதியினையும், அர்த்தத்தையும் பெற்றுக் கொள்கிறது.

தொடர்பாடலின் மிக அத்தியாவசியமான ஒரு மூலகம் நிசப்தமாகும். நிசப்தமின்றேல் பெறுமதி மிக்க வார்த்தைகள் நிலை பெற முடியாதவையாகி விடும். நிசப்தத்தில் எம்மை நாமே நன்கு அறிந்து கொள்ளவும், எமக்கு நாமே காது கொடுத்துக் கேட்கவும் முடியும். நிசப்தத்தில் நல்ல சிந்தனைகள் பிறக்கின்றன. அவை ஆழம் பெறுகின்றன. நாம் என்ன பேச வேண்டும் என்பதையும், ஏனையவர்களிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கின்றோம் என்பதையும் ஐயமற அறிந்து கொள்கின்றோம். எம்மை நாமே எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதை நாம் தேர்ந்தெடுக்கின்றோம். நாம் அமைதி கொள்ளும்போது ஏனையவர்கள் பேசுவதற்கும், அவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கும் இடமளிக்கின்றோம். போதியளவு பரீட்சிக்கப்படாத எமது சொந்த வார்த்தைகளிலேயும், எண்ணங்களிலேயும் நாம் கட்டுண்டிருப்பதையும் தவிர்க்கின்றோம். இவ்வாறு பரஸ்பர உற்றுநோக்கலுக்கு இடமேற்படுகின்றது. உதாரணமாக, அன்பு வயப்பட்ட மாந்தரிடையே சாடைகாட்டுதல், முக பாவனை, அங்க அசைவுகள் போன்ற அடையாளங்கள் மூலம் ஒருவருக்கொருவர் தம்மை வெளிக்காட்டுவதையும், மிகவும் நம்பத் தகுந்த தொடர்பாடல் இடம்பெறுவதையும் அடிக்கடி நாம் நிசப்தத்தில் அவதானிக்க முடிகின்றது. மகிழ்ச்சி, கவலை, துயரம் போன்றவையும் நிசப்தத்தில் பரப்பப்படக் கூடியவை. பரிமாறப்படக் கூடியவை. இது உண்மையில் அவைகளுக்கு ஓர் சக்திமிகு வெளிப்படுத்தும் பாங்கினை வழங்குகின்றது. இவ்வாறு நிசப்தமானது உள்ளடக்கப்பட்ட உறவின் இயற்கைப்பாங்கினையும், உண்மையான அளவினையும் துல்லியமாகக் காட்டுகின்ற செவிமடுத்தலுக்கான கூர்ந்தறியும் திறனையும், ஏற்றுக் கொள்ளும் திறனையும் வேண்டிநிற்கின்ற உயிர்த்துடிப்பான தொடர்பாடலுக்கு நிசப்தம் வழி சமைக்கின்றது.



செய்திகளும், தகவல்களும் மிகுதியாக காணப்படும் வேளையில் தனிச்சிறப்பு அல்லது முக்கியமற்றவை அல்லது இரண்டாம் தரமானவற்றிலிருந்து தனிச்சிறப்புமிக்கவற்றை வேறு பிரித்து அறிய வேண்டுமானால் அங்கு நிசப்தம் அவசியமாகின்றது. இது மதிப்பீடுகளினை மேற்கொள்வதற்கும், செய்திகளை பாகுபடுத்துவதற்கும் நம்பத் தகுந்த பகிரங்கப்பட்ட அறிவு மூலத்திற்கு வழி சமைக்கின்றது. ஆழ்ந்த சிந்தனை மிக்கதும், பொருத்தப்பாடானதுமான அபிப்பிராயங்களினை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கின்றது. முதற்பார்வையில் இணைக்கப்படாதனவாக காணப்படுகின்ற நிகழ்வுகளிடையே பிணைப்பினைக் கண்டறியவும் ஆழ்ந்த சிந்தனை எமக்கு உதவுகிறது. இது நிகழ்வதற்கு நிசப்தம், வார்த்தைகள், கற்பனைகள், ஒலிகள் இடையிலான நேரிய சமநிலைத்தன்மையை ஆதரவளித்துக் காப்பாற்றுகின்ற ஒருவகை சூழல் தொகுதி ஒன்றினை, பொருத்தப்பாடான சுற்றாடல் ஒன்றினை விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

விடை தேடப்படவேண்டிய வினாக்களினால் பெருமளவு ஊட்டம் பெற்றதாக இன்றைய தொடர்பாடல் செயற்பாங்கு அமைந்துள்ளது. அறிவுரை, கருத்துக்கள், தகவல்கள், விடைகள் போன்றவற்றை வேண்டி நிற்கும் அனேகமானவர்களுக்கு தொடர்பாடலின் தொடக்கநிலைப் புள்ளியாக தேடல் இயந்திரங்களும், சமூக வலையமைப்புக்களும் மாறியுள்ளன. எமது காலத்தில் வினாக்களுக்கும், விடைகளுக்குமான ஒரு கருத்தாடலரங்காக இணையத்தளம் விளங்குகின்றது. உண்மையில் இக்கால மக்கள் முன்னரெப்போதும் கேட்டிராத வினாக்களுக்கும், அறிந்திராத தேவைகளுக்கும் சொல்லடி தரும் விடைகளை அடிக்கடி வழங்குகின்றனர். நிசப்தம் எமக்கு ஒரு பெறுமதிமிக்க பண்டமாகும். இதனூடாக எமக்கு கிடைக்கும் தரவுகளில் மிகவும் உண்மைத் தன்மை மிகு வினாக்களினை அடையாளம் கண்டு கொளகின்றோம். அவற்றின்மீது எமது கவனத்தை ஒரு முகப்படுத்தி மிகப் பொருத்தமான பகுத்தறிதலினை பிரயோகிக்கின்றோம்.

உலகின் தொடர்பாடலின் பல்வகைமை, மற்றும் சிக்கல்தன்மை நடுவே அனேக மக்கள் மானிட இருப்பின் தெரிந்து கொள்ள முடியாத வினாக்களினை நேருக்கு நேர் எதிர் கொள்கின்றனர். நான் யார்? எனக்கு என்ன தெரியும்? நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எதனை எதிர்பார்க்கலாம்? என்பனவே அவ்வினாக்கள். இத்தகைய வினாக்களை வினவுகின்றவர்களுக்கு மிகுதியான கருத்தாடல்களுக்கான வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் வார்த்தைகள், வார்த்தைகளின் இடமாற்றுதல்கள் மட்டுமன்றி விரைவான விடையிலும் பார்க்க மிகவும் சொல்லாற்றல் வாய்ந்த நிசப்தமான ஆழ்ந்த சிந்தனைக்கான அழைப்பினையும் நாம் வலியுறுத்திக் கூறவேண்டும். அத்துடன் அவர்கள் தம் இருப்பின் ஆழத்தினை அடைவதற்கு அனுமதிக்க வேண்டும். மானிட மனங்களில் கடவுள் பொறித்து வைத்துள்ள அறிவை நோக்கிய பாதையினை அவர்களுக்கு திறந்து விட வேண்டும்.

அதிகரித்த அன்றேல் சொற்ப அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த மானிட வாழ்விற்கு அர்த்தமும், நம்பிக்கையும் தருகின்றதுமான மனித இனத்தின் அமைதியின்மை, உண்மைக்கான தேடல் போன்றவற்றினை வினாக்களின் தொடர்ச்சியான பாய்ச்சலானது விளக்கி நிற்கின்றது. இறைநம்பிக்கையற்ற அபிப்பிராயங்கள் மற்றும் வாழ்வின் அனுபவங்களின் ஆழமற்றதும், எதிர்ப்பின்றி செயற்படுகின்றதுமான பரிமாற்றத்துடன் ஆண்களும், பெண்களும் மன நிறைவு காணமுடியாது. நாமனைவரும் உண்மையைத் தேடுபவர்களாக உள்ளோம். முன்னரெப்போதினும் பார்க்க இன்று இந்த ஆழ்விருப்பினை நாம் பகிர்ந்துகொள்கின்றோம். மக்கள் தகவல்களினைப் பரிமாறிக் கொள்ளும் போது உலகைப் பற்றிய தமது நோக்கு, தமது நம்பிக்கைகள், தமது முடிவான குறிக்கோள்கள் போன்றவற்றினை ஏலவே தம்மிடையே பாரிமாறிக் கொள்கின்றனர். (2011ம் ஆண்டின் உலக தொடர்பாடல் தினசெய்தி)

இறைவார்த்தைப் பரிமாற்றம் அல்லது தியானம், இறைவேண்டல்களுக்கான தருணங்கள், நிசப்தத்திற்கான வெற்றிடத்தை உருவாக்குதல் போன்று ஆழ்ந்த சிந்தனைக்கும், நம்பிக்கைதரும் வினாவுதலுக்குமான நேரத்தைக் கண்டு கொள்வதற்காக மக்களுக்கு உதவக்கூடிய சமூக இணை வேலைத் திட்டங்கள், மற்றும் பல்வேறு வலையமைப்புக்கள் மீது கவனம் குவிக்கப்படல் வேண்டும். தமது சொந்த உள்ளார்ந்த வாழ்விற்கு நேரம் ஒதுக்குவதை புறக்கணிக்காத உரையாடலில் பங்குபற்றும் வரையில் விவிலிய வசனத்திற்கு மேற்படாத சுருக்கமான சொற்றொடரில் மிகுதியான சிந்தனைகள் பரப்பப்படலாம்.

எல்லப் பொருட்களுக்கும் அர்த்தம் வழங்குகின்ற உண்மையையும், தம்மையும் மீளக்கண்டு பிடிப்பதற்கு மக்களுக்கு உதவுகின்ற அனுகூலமான நிலைமைகளாக ஏகாந்தத்தையும், நிசப்தத்தையும் பல்வேறு சமய பாரம்பரியங்கள் கருதுவது ஆச்சரியம் தரத்தக்கதாக இல்லை. விவிலிய வெளிப்படுத்துகையின் கடவுள் வார்த்தைகளின்றியே பேசுகின்றார். கிறிஸ்துவின் சிலுவையானது கடவுள் தமது நிசப்தத்தில் பேசுவதையே விளக்கி நிற்கின்றது. கடவுளின் திருமகனின் உலக பயணத்தில் முடிவு செய்யும் ஆற்றலுள்ள ஒன்றாக, எல்லாம் வல்ல தந்தையின் தொலைதூர அனுபவமாக கடவுளின் நிசப்தம் விளங்குகிறது. மனு உருவெடுத்த வார்த்தை, கடவுளின் நிசப்தம் அவரது ஆரம்பகால வார்த்தைகளை நீட்டிச் செல்கிறது. அந்தகார கணப்பொழுதுகளில் பரமரகசியமான தனது நிசப்தத்தின் ஊடாக அவர் பேசுவார். (Verbum Domini 21) கடவுளின் அதிஉயர் கொடையாக வழங்கப்பட்ட கடவுளின் அன்பின் சொல்லாற்றல் சிலுவையின் நிசப்தத்திலேயே பேசுகின்றது. இறைமகனின் இறப்பின் பின்னர் உலகம் முழுவதும் பெரும் நிசப்தம் நிலவுகின்றது. "புனித சனிக்கிழமையன்று அரசன் உறங்கும் போது மனித உடலில் உறங்கிய கடவுள் காலாதி காலமாக உறங்கியவர்களை உயிர்ப்பித்து உயர்த்தினார்." கடவுளின் குரல் மானிட இனத்தின்மீதான அன்பில் தோய்ந்ததாக மீள ஒலிக்கிறது.

நிசப்தத்தில் கடவுள் எம்முடன் உரையாடுகிறார் என்றால் மறுதலையாக கடவுளுடன் கடவுளைப்பற்றி நிசப்தத்தில் நாம் உரையாட[illegible] தக்க சாத்தியக்கூறுகளை[illegible] கண்டறிய வேண்டும். "கடவுளின் நிசப்தத்தினுள் எம்மை அறிமுகமாக்குகின்றதும், எம்மை விலை கொடுத்து மீட்டுக்கொள்ளும் வார்த்தை எங்கு அவதரித்ததோ அங்கு எம்மை இட்டுச்செல்கின்றதுமான ஆழ்ந்த சிந்தனையாக உருவெடுக்கும் நிசப்தம் எமக்கு தேவைப்படுகிறது." (6 ஐப்பசி 2006ல் சர்வதேச இறையியலாளர் ஆணைக்குழுவுடனான திருப்பலியின் போது திருத்தந்தை ஆற்றிய மறையுரையிலிருந்[illegible]) கடவுளின் கம்பீரத்[illegible]யும், ஆடம்பரத்தையும் பேசவிளையும்போது எமக்கு வார்த்தைப் பஞ்சம் ஏற்படும். நிசப்தமான ஆழ்சிந்தனைக்கு இடம் வகுக்கும். இதற்கு ஆழ்சிந்தனையிலிருந்து அதன் உள்ளார்ந்த சக்தியுடன் மறைபரப்பும் அவசர உணர்வு, வலிந்து ஈர்க்கின்ற கடமைப்பொறுப்பு முகிழ்ந்தெழும். தந்தையுடனும் அவருடைய மகன் இயேசுக்கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, கேட்டதை உங்களுக்கு அறிவிக்கின்றோம். *(1யோவான் 1:3)*

நிசப்தத்திலான ஆழ்ந்த சிந்தனையானது எமது அயலாரை நோக்கி எம்மை இட்டுச் செல்கின்றவரது அன்பின் ஊற்றினுள் எம்மை ஆழ்த்துகின்றது. இதனால் அவர்களது துன்பத்தை நாம் உணரலாம். அவர்களுக்கு கிறிஸ்துவின் ஒளியை அவரது வாழ்வின் செய்தியை, அவரது முழு அன்பின் கொடையை நாம் அவர்களுக்கு வழங்கலாம்.

*(வளரும்....)*


பொன்விழா வாழ்த்து



"நீரோ கற்றுக்கொண்டவற்றையும் உம் மனதில் உறுதியாய் நிறுத்திய உண்மைகளையும் கடைப்பிடியும்" (2 திமோ 3 அதி. 14ல்)
இறைபணியில் பொன்விழா காணும்
அருட்சகோதரி
எத்தல் விவா (அ.கா)
1962.07.07 - 2012.07.07
இறைவா இதுவரை எம் சகோதரியைக் காத்து வழி நடத்தியமைக்காகவும் நீர் அவருக்கு செய்த நன்மைகளுக்காகவும் நன்றி கூறி, இனி வரும் காலங்களிலும் காத்திடவேண்டும் என்று வேண்டுகின்றோம்.
128 கொழும்புத்துறை வீதி பாண்டியந்தாழ்வு.
வாழ்த்துபவர்கள் குடும்பத்தினர்.
Add: 64/12

# புற்றுநோய் எனும் அரக்கனுடனான போராட்டத்தில் ஒரு இளம் தாய்...

## - பிறவாத மகவுக்காக உயிர்த்தியாகம் செய்த தாயின் உண்மைச் சம்பவம் -

இத்தாலிய நாட்டு இளம்பெண் ஒருவர் இவ்வுலகில் இன்னும் வந்து அவதரியாத தனது மகனுக்காகத் தன்னைப் பீடித்திருந்த புற்றுநோய்க்கான சிகிச்சையைத் தாமதித்ததன் மூலம் உயிர்த்தியாகம் செய்தார்.

இருபத்தெட்டு வயதான Miss Corbella, Enrico Petnilloவை இனிது மணம் புரிந்து கொண்ட பின்னர் இரண்டு தடவைகள் தாய்மையடைந்து இருந்தும் குழந்தைகள் பிறக்கும் முன்னரே பறிகொடுத்திருந்தார். அவர்களுக்கு டேவிட், மரியா என்று பெயரிட்டிருந்தார்.

சிறிது காலத்தின் பின்பு அவள் மீண்டும் கருவுற்றாள். அவளுடைய மூன்றாவது பிரசவம் ஆரோக்கியமானது என்று வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறிருக்க, அவர்கள் வாழ்வில் புற்றுநோய் அரக்கன் வடிவில் புயல் வீச ஆரம்பித்தது. இந்நோய்க்கான சிகிச்சை வயிற்றில் வளரும் கருவுக்கு மிகவும் ஆபத்தாக அமையும் என்று Miss Corrabull நன்று அறிந்திருந்தாள்.

தமது முதல் இரு குழந்தைகளை இழந்த பின்னர் கணவனும் மனைவியும் கத்தோலிக்க மதத்தின் கருச்சிதைவுக்கு எதிரான கருத்துக்களில் அதீத ஈடுபாடு கொண்டிருந்தனர். தமது மூன்றாவது பிள்ளை Fransisco



தமிழில் C.Y. இராமகிருஸ்ணன்

பிறக்கும் வரை சிகிச்சையைத் தள்ளிப்போட இருவரும் கனத்த இதயத்துடன் முடிவு செய்தனர்.

அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது. வைகாசி 30,2011ல் குழந்தை Fransivo அவதரித்தாள். இதன் பின்னர் தாயாரின் ஆரோக்கியத்தின் ஸ்திரம் ஆட்டம் காண ஆரம்பித்தது. முதலில் வலது கண் பார்வையை இழந்தாள். சாவுக்கேதுவான இந்நோயுடன் ஒரு வருட காலம் போராட்டத்தின் பின்னர் இவ் இளந்தாய் கடந்த ஆனி 13ல் உயிர்துறந்தார்.

தனது இறுதி நாட்களில் தனது பதின்மூன்று மாதங்களே நிரம்பிய மகனுக்கு எழுதி வைத்த மடலில் தான் Dasid, Maria எனும் அவனது சகோதரர்களைப் பார்ப்பதற்காக விண்ணுலகு செல்வதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், "நீ உனது தந்தையாருடன் காலத்தைக் கழி நான் உனக்காக மன்றாடுவேன்" என்றும் கூறியிருந்தாள்.

அவளது கணவன் தங்கள் மகன் வளர்ந்துவிட்ட பின்பு அத்தாயின் தியாகத்தை எடுத்துரைப்பதாக உறுதி பூண்டார். "அன்புக்காக உயிரையும் இன்முகத்துடன் சந்தளிக்கும் உயரிய உத்தம குணத்தையும் அவனுக்குக் கற்பிக்க எண்ணினார். "இதைத்தான் உன் அன்னையும் செய்தார். அவள் எல்லோரையும் நேசித்தாள். ஆதலால் நேசிக்கப்பட்டாள். முன்பு இல்லாதவாறு இப்போது அவள் எப்பொழுதும் எனது அருகில் இருப்பதாக உணர்கிறேன்."

அவள் மகிழ்ச்சியாகத் தனது சாவை அரவணைத்துக் கொண்டதை அருகில் இருந்து பார்த்தது எனக்குப் பெரும் சவாலாக அமைந்தது என்பது அன்பான மனைவியைப் பிரிந்து துயருறும் கணவனின் கூற்று.

மேலும் "இவ்வுலகில் அன்பைப் பெறுவதற்கும் கொடுப்பதற்கும் நூறு வருடங்கள் அல்ல முப்பது நிமிடங்கள் மட்டுமே வாழ்ந்தால் போதும்"

இத்தகைய அன்பு எந்தச் சவால்களையும் சமாளிக்கும். இறப்பைக் கூட இனிது வரவேற்கும் என்பதும் அத்தந்தையின் பொருள் பொதிந்த வார்த்தைகள். இவை Vatican வானொலிக்கு அளித்த செவ்வியில் கூறப்பட்டவை.

கடந்த யூன் 16ல் இறப்பிலும் தைரியத்தைக் காத்த இவ்வீர மங்கையின் இறுதி ஊர்வலத்தில் பல நூற்றுக்கணக்கான பார்வையாளர் மத்தியில் ரோம் மாநகர குருமுதல்வர் கருதினால் Agostino, இத்தாயின் வாழ்வை 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த Gianna Bretta எனும் இதே சூழ்நிலையில் வாழ்ந்த புனிதையின் வாழ்வுடன் ஒப்பிட்டுக் கூறினார்.

# உண்மையுள்ள மனைவி

தமிழாக்கம்
க. பீற்றர் – சாவகச்சேரி

கப்ரான் மிகப்பெரிய கஞ்சன். தான் சாகும் போது தனது சொத்துக்கள் அனைத்தையும் தன்னுடன் கொண்டுபோக எண்ணினான். தனது மனைவியை அழைத்து "எனது மறுவாழ்வுக்குப் பணம் வேண்டும். எனது சொத்துக்கள் முழுவதையும் பணமாக மாற்றுவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறேன். என்னுடைய உடலோடு எனது பணம் முழுவதையும் புதைத்து விடு" என்றான். அவன் மனைவி பதிலாக "இதோ பாருங்கள். மறு உலகில் யாருக்கும் பணம் தேவையில்லை. பணத்தை அங்கு கொண்டு போகவும் முடியாது. புதை குழியில் யாருக்கும் பிரயோசனப் படாமல் அது மண்ணாகி விடும்" எனக் கூறினாள்.

அவனோ அவள் சொல்வதைக் கேளாமல் பணம் முழுவதையும் தன்னுடன் புதைத்து விடுவதாகச் சத்தியம் செய்யும்படி வற்புறுத்தினான். அவளது தொல்லையைத் தாங்க முடியாமல் அவளும் சத்தியம் செய்து கொடுத்தாள். சில நாட்களில் அவன் இறந்து விட்டான். இறுதிக் கிரியைகள் முடிவடைந்து பிரேதப் பெட்டியை மூட முன்பு ஒரு காகித உறையை அதற்குள் வைத்தாள் அவனது மனைவி. பெட்டியை மூடிப்புதைப்பதற்காகக் கொண்டு போய் விட்டார்கள். இதனை அவதானித்த அவளது நண்பி. "முழுப் பணத்தையும் பெட்டிக்குள் வைத்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்" என்றாள். இறந்தவனின் மனைவி "நான் ஒரு உண்மையான மனைவி செய்த சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும் அல்லவா?" எனப்பதிலளித்தாள். "முழுப் பணத்தையும் புதைக்கக் கூடிய அளவுக்கு நீ முட்டாள் இல்லையே" நண்பி கேட்டாள். "நீ சொல்வது சரி அவரது பணம் முழுவதையும் எனது வங்கிக் கணக்கில் போட்டிருக்கிறேன். அந்தத் தொகைக்கு ஒரு காசோலை எழுதி அவரது பெட்டிக்குள் வைத்து விட்டேன். தேவையான போது பணமாக மாற்றிக் கொள்ளட்டும்" எனப்பதில் கூறினாள் இறந்தவனின் மனைவி.

# சிந்திக்க ஓர் சித்திரம்




ச. சுலோச்சனா

# பிரிவின் நீண்ட 25 ஆண்டுகள்

எமக்காக இறைவனின் கொடை
06 - 05 - 1934



தனக்கான இறைவனின் அழைப்பு
20 - 07 - 1987

## அமரர் மார்சல் இம்மனுவல் அரசநாயகம்

(புகையிரத பகுதி பாதுகாவலர்)

இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவிலும் துயவிலும் வாழ்கிறோம் புனித நீக்கொலார் நவநாட்கள்கால நீண்ட நினைவுடன் அவரது தோழமையில் நீங்கள் நித்திய இளைப்பாற்றியில் இறைவனின் சமூகத்தில் அடைக்கலமாய் இருப்பீர்கள் என்றும் நாமும் உம்மோடு காலகதியில் முழு சம்பாவனையில் இணைவோம் எனவும் உறுதியான நம்பிக்கையுடன் வாழ்கிறோம்.

*"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்"*

அன்னாரின் நினைவுத்திருப்பலி (21-07-2012) சனிக்கிழமை காலை 7.00மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்களை இத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் விண்ணக வாழ்விற்கு நன்றி கூறி செபிக்குமாறு அழைத்து நிற்கிறோம்.

அவரின் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

உசன்
மிருசுவில்

Add: 65/12

# மக்களுக்கு வாழ்வளி...(3ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள மக்கள் தற்காலிகக் கொட்டகையிலேயே வாழ்கின்றார்கள். கொளுத்தும் வெய்யில் கோரச் சுமைகளோடு மனித உயிர் இழப்புக்களோடு விடியாதோ? அரசாங்கம் தான் இடிந்த வட்டைத் திருத்தித்தராதோ, புது வடுகளை கட்டித் தராதோ, எங்கள் நிலம் எங்கள் நிலமாய் புத்துயிர் பெறாதோ என்று கலங்கும் இம்மக்களின் கருத்து புனிதமானவை மதிக்கப்படவேண்டியவை. செலலடிக்கும். குண்டடிக்கும் பலவருடங்களாய் அஞ்சியவர்கள் இன்று கஞ்சிப் பாத்திரத்துடன் எஞ்சியுள்ளார்கள். மெத்தையிலே இருந்து உத்தரவு போடும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் மத்திமமாகவே நடந்தேறுகின்றது. தேர்தல் காலங்களில் தெருநாய்களாய் வீடு தேடி வரும் அரசியல் அதிகாரிகள் அடுப்பில் உணமையில் அரிசிதான் வேகின்றதோ அல்லது போனால் உள்ளம்தான் வேகினறதோ என்று புரியும் காலம் ஏதோ.

அபிவிருத்தி என்பது வெறுமனே வீதிகளையும், அரச நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்வது அல்ல மாறாக பொது மக்களின் ஏக்கங்களையும், அவர்களின் அபிலாசைகளையும், சொந்த மணணின் கனவுகளையும் விருத்தி செய்வதே முழுமையான அபிவிருத்தி ஆகும்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இரண்டாயிரத்து எழுநூற்று இருபத்திரெண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டாயிரத்து முந்நூற்று எண்பத்தினான்கு பேர்கள் பாதிப்புக்குள்ளாயினர். அத்தோடு இந்தப்பிரிவில் இதுவரை ஐம்பத்துமூன்று குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுநாட்பத்தியேழு பேர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பல்வேறு ஊர்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தஞ்சம் கொடுத்த இம்மண் இன்று தம் மண் எப்போது மலருமோ? என்று கண்ணீரோடு காத்திருக்கின்றனர். காலம் வருமென்று பூத்திருக்கின்றனர்.

# இலங்கைக்குத் திரும்பும் அகதிகள் எண்ணிக்கை குறைகிறது

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் அகதிகள் எண்ணிக்கை இவ்வாண்டு ஜூன் மாத இறுதி வரை, கடந்த ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் குறைந்திருப்பதாக ஐ.நா. அகதிகள் நிறுவனம் கூறியுள்ளது.

இந்த ஆண்டு ஆறு மாதங்களில், இதுவரை 662 அகதிகளே, தாங்களாக முன் வந்து திரும்ப வந்திருப்பதாகக் கூறும் ஐ.நா அகதிகள் நிறுவனம், இவ்வெண்ணிக்கை கடந்த ஆண்டு இதே காலத்தில் 962 ஆக இருந்ததது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

2011ம் ஆண்டில் மொத்தம் 1,728 அகதிகள், ஐ.நா. அகதிகள் நிறுவனத்தின் உதவியுடன் நாடு திரும் பியதாகவும் கூறப்பட்டுள்ளது.

அகதிகள் திரும்புவது குறைந்திருப்பதற்கான காரணங்கள் என்னவென்று கூறுவது கடினம் என்று கூறும் அந் நிறுவன அதிகாரி Michael Zwack, நாடு திரும்புவது என்பது தனிப்பட்ட ஒவ்வொருவரின் தனிபபட்ட முடிவு என்றார். UNHCR என்ற ஐ.நா. அகதிகள் நிறுவனம் 2011ம் ஆண்டின் இறுதியில் வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி, இந்தியாவின் தமிழ் நாட்டில் 112 அகதிகள் முகாம்களில் 68,152 இலங்கை அகதிகள் வாழ்ந்தனர். இலங்கைத் தமிழ் அகதிகள் 65 நாடுகளில் வாழ்வதாகவும் இந்நிறுவனம் கூறுகிறது.

## நீங்கா நினைவில்

**50ம் ஆண்டு**



ஞா.இ.ஆரோக்கியசாமி
(இராசதுரை)

**02ம் ஆண்டு**



மே.ஜே.லில்லி
ஆரோக்கியசாமி

| | | |
|---|---|---|
| 18-12-1893 | மண்ணில் | 06-04-1913 |
| 16-07-1962 | விண்ணில் | 22-01-2011 |

**29ம் ஆண்டு**



சீ. அந்தோனிப்பிள்ளை
சிங்கராசா

**23ம் ஆண்டு**



பெ.வெ.ராணி
அந்தோனிப்பிள்ளை (ராணி ரீச்சர்)

| | | |
|---|---|---|
| 25-01-1931 | மண்ணில் | 06-03-1934 |
| 20-09-1983 | விண்ணில் | 18-07-1989 |

எம் வாழ்வின் வழிகாட்டிகளாக
எம்மோடு என்றும் பயணிக்கும்
எம் இனிய பெற்றோர்களே,
உடன் பிறப்புக்களே
இத்தனை ஆண்டுகள்
கடந்த பின்னும்

நீங்கா நினைவுகளோடு
நிலையான பாசத்தோடு
என்றும் எம்மில்
வாழ்பவர்களே!

வாழ்வில் நாம் உயர்ந்திட
உறுதுணையாய் நிற்பீர்
என்றிருந்தோம் ஆனால் ? ? ?
கடவுளின் சித்தம்
இதுவென எண்ணி
வாழ்கின்றோம்

**4ம் ஆண்டு**



மேரி கிளாறா
நவரத்தினராசா (ராஜேஸ்)

மண்ணில்
12-08-1943

விண்ணில்
25-07-2008

இவர்களின் ஆன்ம சாந்திக்காக ஆடி மாதம் 16ம், 18ம், 25ம் திகதிகளில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
மே.மா.கமலா சவரிமுத்து
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நீர்கொழும்பு.
031 2233390 , 011 2937320

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
இம்மானுவேல் லொட்ஜ் - மாதகல்.

## விண்ணக வாழ்வில் 8ம் ஆண்டு நிறைவு



அன்னை மடியில் 12 - 06 - 1932

இறைவன் மடியில் 13 - 07 - 2004

நற்குருவாய்
நல் ஆசானாய்
நல் வழிகாட்டியாய்
ஊர் வாழ உழைத்த
உங்கள் வாழ்வை
நினைக்கின்றோம்...
செபிக்கின்றோம்....

அமரர்
அருட்பணி அன்ரன் இராஜநாயகம்

மறைக்கல்வி நடுநிலையம்,
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
அருட்பணி. மகேந்திரன்
அருட்பணி. அன்ரன் ஜோர்ஜ்

## 2ம் வருட நினைவு

"இறப்பும் உயிர்ப்பும் நானே என்னில் விசுவாசம் கொள்ளும் எவரும் இறப்பினும் உயிர்வாழ்வான்"

தாயின் மடியில் 1937 - 05 - 14



இறைவன் அடியில் 2010 - 07 - 11

W.L.S மரியாம்பிள்ளை (மாஸ்ரர்)

ஆண்டுகள் இரண்டு மறைந்தனவோ!
ஆறவில்லை எம் துயரம் – அப்பா
ஆண்டுகள் பல சென்றாலும் மாறிடாது – உங்கள் நினைவு மட்டும்
உங்கள் ஆத்மா சாந்திக்காக தினமும்
வேண்டுவோம் இறைவனையே..

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Add 63/12

## 10ம் வருட நினைவு

மண்ணில் 25 - 03 - 1916



விண்ணில் 27 - 06 - 2002

அமரர். மரியம்மா பத்திநாதர்

இறைமனை புகுந்து வருடங்கள் பத்து ஆயினும்
இன்றும் எம் உள்ளத்தில் நினைவாய் உள்ளீர்கள்
எங்கள் அன்பின் அம்மா

நீங்கள் இறைபிரசன்னத்தில் வீற்றிருந்து, ஐயாவுடன் சேர்ந்து எங்களுக்காக செய்கின்ற மன்றாட்டுக்களும், பரிந்துரைகளும் எங்களை அன்புடன் வாழவைக்கின்றன. தொடர்ந்தும் இறைவனிடம் எங்களுக்காக மன்றாடவும், பரிந்துரைக்கவும் வேண்டி நிற்கின்றோம்.

அன்புடன்: அருட்பணி ஜெபரட்ணம்
அருட்சகோதரி புளோறினா
மற்றும் பிள்ளைகள் குடும்பத்தினர்.

அலுக்கை
அளவெட்டி.

Add: 62/12

## விண்ணக வாழ்வின்....
## 02ம் ஆண்டு நினைவலைகள்



அருட்சகோ.
மேரி லூயிஸ்
அந்தோனிப்பிள்ளை

42/5, மவுண் கார்மல் வீதி
யாழ்ப்பாணம்.

"ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு பெற்றவர்கள்
ஏனெனில் அவர்கள் இளைப்பாறுவார்கள்.
ஏனென்றால் அவர் செய்த நன்மைகளே
அவர்களின் பின் தொடர்ந்து கூடவரும்.

அன்னையின் மடியில் 04-09-1939

ஆண்டவன் கரத்தில் 10-07-2010

ஆண்டு இரண்டு கடந்திடினும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
உங்கள் உரு எங்கள் நெஞ்சமதில்
மரகதமாமணி போல் தோன்றுதம்மா.

இவரின் ஆன்மா, நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 06-07-2012 வெள்ளிக் கிழமை காலை 6.15 மணிக்கு புனித கார்மேல் மாதா ஆலயத்திலும், 10-07-2012 செவ்வாய்க் கிழமை காலை 6.00மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும், இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Add-61/12

# தூரவிலகிச் செல்லும் சமாதானம்

**யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதானத்துக்கான ஆணைக்குழு ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம்**

சமாதானத்திற்கான யுத்தம் என்று விளம்பரப்படுத்தப்பட்ட போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்தபின்னும் இந்தப் போரினால் உள, உடல் மற்றும் பொருளாதார வழிகளில் பாதிக்கப்பட்ட வடபகுதிமக்கள் இன்னும் உண்மையான சமாதானத்தை அனுபவிக்க முடியவில்லை என்பது தான் உண்மையென்பது இங்கு நடைபெறும் நிகழ்வுகளிலிருந்து நிரூபணமாகின்றது. சமாதானம் ஏற்படும் என்று ஆரம்பத்திலிருந்த எதிர்பார்ப்பும் நாள் செல்லச் செல்ல அருகிவருகின்றது.

வீதி அகலிப்பு, கார்ப்பெற் வீதிகள், புதிய பாலங்கள், இரயில் பாதையமைப்பு வேலைகள், புதிய வங்கிகள், கடைத்தொகுதிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் போன்றவை வெளியிலிருந்து வருபவர்க்கு வட பகுதி வேகமாக வளர்ந்து வருகின்றது என்ற தோற்றப்பாட்டைக் கொடுத்தாலும் இவையெல்லாம் இங்குள்ள மக்களின் சுதந்திரமான, அச்சமில்லாததொரு வாழ்க்கைக்கு மாற்றீடாக முடியாது.

வெளியுலகுக்கும், சர்வதேச தலைவர்களுக்கும் அரசு அளிக்கும் விளககத்தின்படி முகாம்களில் இருந்த ஏறக்குறைய 3 இலட்சம் பேரில் ஒருசில ஆயிரம் பேரைத் தவிர மற்றெல்லோரும் சகல வசதிகளுடனும் மீளகுடியமர்த்தப்பட்டு விட்டனர். எஞ்சியோரும் ஒரு சில மாதங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுவிடுவர். மக்கள் எல்லோரும் சுதந்திரமாக எதுவித நெருக்கீடுகளுமின்றித் தமது அன்றாட வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர் என்ற தோற்றப்பாடு வழங்கப்படுகின்றது. ஆனால் உண்மை நிலை இதற்கு எதிர்மாறாக உள்ளது.

இந்நிலையில் யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதானத்திற்கான ஆணைக்குழு இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் எவ்வாறு மக்களின் அன்றாட சுதந்திரமான வாழ்வையும் பாதுகாப்பையும் பாதிக்கின்றது என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

## இராணுவ ஆட்சி

வடக்கில் இன்று நடைபெறுவது ஒரு இராணுவ ஆட்சி முன்னாள் இராணு அதிகாரியாகவிருந்த ஆளுநர் அதியுயர் வல்லமையுடையவாராயுள்ளார். அரச அதிகாரிகள் மற்றும் சிவில் அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள் போன்ற அனைவரும் அவர் சொல்வதை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாயுள்ளனர். இவரது முடிவுகள் எல்லாத்துறைகளிலும், எல்லா அனுபவங்களிலும் இறுதியானவை. உ+ம ஒரு பிரபல பாடசாலையில் பாடசாலை மாணவிகள் ஒரு கல்வியதிகாரியை மாற்ற மேற்கொண்ட போரட்டத்திற்காக மாணவிகள் தலைவியர் ஐவர் ஆளுநர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இதுபோன்ற முன்னைய போதும் கேள்விப்படாதவை.

* கணிசமான மக்கள் கூடும் குடும்ப நிகழ்வாயினும் பொதுநிகழ்வாயினும் அதைபற்றி முன்கூட்டியே இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு அனுமதி பெறப்படவேண்டுமென்பது ஒரு எழுதப்படாத சட்டமாக உள்ளது. இறப்பு வீடு, பூப்புனித நீராட்டு விழா போன்றவை முதலாக இதனுள்ளடங்கும்.

* ஆலய வழிபாடுகளில் முதலாக இராணுவத் தலையீடு உள்ளது. உ+ம் விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் போன்ற சிறப்பு நாட்களில் வழமையாக ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளுக்குப் பல இடையூறுகள் இராணுவத்தால் ஏற்படுத்தப்படுகின்றன. கடந்த வருடம் (2011ல்) இம்மாவீரர் தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்தது. உ+ம் அன்று பல ஆலயங்களில் வழமையான ஞாயிறு வழிபாட்டிற்கான மணியடிக்கத்தடை விதிக்கப்பட்டது. சாவகச்சேரியில் ஒரு ஆலயத்தில் மாலை வழிபாட்டிற்கு மெழுகுவர்த்தி கொழுத்துவதற்கும் அங்கு வந்த இராணுவத்தினருடன் அவ்விடத்துக் குருவானவர் வாதாட வேண்டியிருந்தது.

* எதுவித காரணமுமின்றி பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்படுவது போன்ற நிகழ்வுகள் எப்போதாவது ஒருமுறை நிகழும் நிகழ்வு அல்ல. உ+ம் அண்மையில் பருத்தித்துறை வியாபாரி மூலை சில இராணுவத்தினர் எதுவித முகாந்திரமுமின்றி அங்கு நின்ற பொதுமக்களைத் தாக்கியுள்ளனர். இது குறித்துப் பொலீசாரிடம் முறைப்பாடு பதியச் சென்ற போது பொலீஸ் நிலையத்திருந்த பொலீசார் முறைப்பாடு பதிய மறுத்துவிட்டனர். பின்னர் மக்கள் பாராளுமன்ற உறுபபினர் விநாயகமூர்த்தியுடன் சென்று நீண்ட நேரவாதாட்டத்தின் பின்னரே முறைப்பாடு பதியப்பட்டது. சில மாதங்களுக்கு முன் A.9 வீதியில் பரந்தன் சந்தியில் தமிழர் ஒருவரது வாகனமும் பெரும்பான்மை இனத்தவர் ஒருவரது வாகனமும் இலேசாக மோதுண்டன. வாகனங்களுக்கேற்பட்ட சேதங்கள் காரணமாக இரு வாகனங்களில் வந்தவரிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அப்போது அவ்விடம் வந்த இராணுவத்தினர் எதுவித விசாரணையுமின்றி (விசாரிப்பது பொலீசாருடைய வேலையே) தமிழர் தரப்பு வாகனச்சாரதியையும் அவரது உதவியாளரையும் நையப்புடைத்துள்ளனர். A.9 பாதையில் இதையொத்த வேறு நிகழ்வுகளும் தாக்குதல்களும் வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ந்துள்ளன.

* ஒரு புறத்தில் வட பகுதியில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது. இராணுவ முகாம்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன. மக்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாயிருந்த இடங்களில் குடியமர்த்தப்படுகின்றனர் என்ற பரப்புரை வெளிநாடுகளுக்கும் இங்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்படுகின்ற வேளையின் உண்மை நிலை வேறாக உள்ளது. ஏற்கனவே தற்காலிகமாக இருந்த இராணுவ முகாம்கள் நிரந்தரமாக்கபபடுகின்றன. புதிய நிலங்கள் (மக்களின் காணிகள் உட்பட) இராணுவ தேவைகளுக்காகக் கையகப்படுத்தப்படுகின்றன. உ+ம் வலிகாமம் வடக்குப் பகுதியின் இன்னமும் 23 கிராமசேவைப்பிரிவிலுள்ள மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையுள்ளது. மாதகல், மண்டைதீவு, மன்னார், முள்ளிக்குளம், மூதூர், பொத்துவில் இடங்களில் புதிதாக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. மீளக் கையளிப்பும் நில ஆக்கிரமிப்பும் சாண் ஏற முழம் சறுக்குவது போலவே உள்ளது.

* இராணுவ ஆட்சியின் ஒரு அங்கமாக மக்களால் தேர்ந்தெடுக்கபட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓரம் கட்டப்படுகின்றனர். உ+ம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டமைப்பு உறுப்பினா அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதில்லை. பளை அரச ம.மகாவித்தியாலயத்தின் ஓர் ஆண்டு விழாவில் மலர் வெளியீட்டுக்கு எல்லாம் தயாராக இருந்த போது அம்மலரில் கூட்டமைப்பு பா. உறுப்பினரின் வாழ்த்து செய்தி இடம் பெற்றிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டமையால் மலர் வெளியீட்டு இரத்துச் செய்யப்பட்டது. அண்மையில் வேராவில்லில் ஒரு பாடசாலை விழாவிற்கு கூட்டமைப்பு பா.உ.திரு சிறீதரன் ஒரு சிறப்பு விருந்தினராக வருவதாக அழைப்பிதழில் இருந்த காரணத்தால் அந்நிகழ்வும் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டது. பொது நிகழ்வுகள், பாடசாலை நிகழ்வுகள் போன்றவற்றுக்கு அப்பகுதி இராணுவ அதிகாரிகள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட வேண்டுமென்பது எழுதபபடாத சட்டமாக உளளது.

## பௌத்த மயமாக்கல்

இராணுவ மயமாக்கலின் ஒரு அங்கமாகவும் வெளிபாடாகவும் வட பகுதியில் பௌத்த மயமாக்கல் அரங்கேறி வருகின்றது. வடக்கில் இராணுவ முகாம்கள் உள்ள இடங்களிலும் அவற்றுக் கருகாமையிலும் பௌத்த விகாரைகள் தாதுகோபுரம், சின்னங்கள் நிரந்தரமாக பாரிய அளவில் நிர்மாணிக்கபட்டு வருகின்றன. இந்து ஆலயங்கள் உள்ள இடங்களுக்கு மிகவும் அருகாமையிலும் சில இடங்களில் இந்து ஆலயங்களை இடித்து அந்த இடங்களிலும் மக்களின் உணர்வலைகளுக்கு மாறாக பௌத்த வழிபாட்டிடங்களும் புத்தர் சிலைகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. உ+ம் சாவகச்சேரியிலும், கிளிநொச்சியிலும் இந்து ஆலயங்கள் அகற்றப்பட்டு அவ்விடங்களில் பௌத்த வழிபாட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. புதிய பௌத்த சிலைகள், தாது கோபுரங்கள் பல இடங்களில் பிற மதச்சின்னங்களும் ஆலயங்களுக்கு அருகாமையில் பௌத்த நிலைகள் உருவாக்கப்பட்ட இடங்கள் சில திருக்கேதீஸ்வரம், முருங்கன், மிருசுவில் ஆகியன A.9 வீதியில் மாங்குளத்தில் புதிதாக ஒரு பௌத்த தாது கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருள் உள்ள பௌத்த மதத்தினரைத்தவிர வேறு பௌத்தர்கள் இல்லாத இடங்களில் நிரந்தர பௌதத நிலைகள் ஏற்படுத்தப்படுவதும் ஏற்கனவே இருந்த நிலைகள் பாரியளவில் விரிவாக்கப்படுவதும் வடபகுதி மக்களின் உணர்வுகளைப் பாதிப்பது மட்டுமல்ல இவை பல சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளன.

## அச்சுறுத்தல்கள் – கழிவு நீர், கழிவு எண்ணெய்க் கலாச்சாரம்

நீதிக்காக குரல் கொடுப்பவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், அரச உயர்மட்டத்தில் நிலவும் ஊழல்களைச் சுட்டிக் காட்டுபவர்கள் பல்வேறு வழிகளிலும் அச்சுறுத்தப்படுகின்றனர். அண்மைக் காலமாக இவர்கள் இவ்வாறு இனம் தெரியாதோரால் கழிவெண்ணெய்த் தாக்குதலுக்குள்ளாவது வட பகுதியில் வழமையாகிவிட்டது. உ+ம் இரு வருடங்களுக்குமுன் தென் பகுதியிலிருந்து இங்கு வந்த சர்வமதக்குழுவினர் முன் வட பகுதி மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களைத் தெரிவிக்கப் படுகின்றனர் என்று கூறிய ஜெயக்குமார் அடிகள் மீது மோட்டார் சைய்கிளின் அவரது வதிவிடப் சென்ற 'இனம் தெரியாதோர்' கழிவு நீர் ஊற்றிச் சென்றுள்ளனர். அவர்களுள் ஒருவர் செல்லும் போது தவறுதலாகத் தமது கைத்தொலைபேசி அவ்விடத்தில் விழுந்ததைக் கவனிக்காது சென்று விட்டார். பின்னர் அது ஊர் காவற்றுறை பொலிசாரிடம் கையளிக்கப்பட்டது. இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிறிதொரு சந்தர்ப்பத்தில் யாழ் கத்தோலிக்க ஆயரில்லத்திற்கருகாமையிலுள்ள 'அகவொளி' நிலையத்தில் கொழும்பில் இருந்து வந்த மனித உரிமை ஆர்வலர்களாகிய சட்டத்தரணிகள் சிலர் இலவச சட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த வேளையில் திடீரென அங்கு தோன்றிய 'இனம் தெரியாதோர்' அவ்விடத்தில் கழிவு எண்ணெயை ஊற்றிவிட்டுச் சென்றுள்ளனர். இன்னுமொரு சம்பவம் சில வாரங்களுக்கு முன் நடந்தது. யாழ் போதனா வைத்தியசாலையில் புற்றுநோயியல் நிபுணராயுள்ள க. ஜெயக்குமார் அங்கு நடந்துவந்த சில ஊழல்களைச் சுட்டிக்காட்டியமைக்காக அவரது வீடு தாக்குதலுக்கும் கழிவு எண்ணெய் வீச்சுக்கும் உள்ளாகியது.

கத்தோலிக்கர் மட்டுமல்ல தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருப்பவருமான மன்னார் மறைமாவட்ட கத்தோலிகக ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளார். ஆயரவர்கள் (LLRC) கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் வழங்கிய சாட்சியத்தில் விரிவாக தெளிவாக அரச அலுவலர்களின் தரவுகளின் அடிப்படையில் 1,46,000 பேருக்கு இறுதிப் போரின் பின் என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பியிருந்தார். இம்மக்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்வி அரசுக்குத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆயர் தமது கூற்றுக்களையும் கருத்துக்களையும் யூகத்தின் அடிப்படையில் முன்வைக்கவில்லை தெளிவான விளக்கமான ஆதாரங்களுடனும் அவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும் தெளிவாக முன்வைத்திருந்தார். எனினும் மீண்டும் ஆயரிடம் வந்து இதுபற்றித் துருவித்துருவி விசாரித்தமையானது ஒரு அச்சுறுத்தல் நடவடிக்கையேயன்றி வேறில்லை. அத்துடன் ஆயரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் விதத்தில் பாராளுமன்றத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சுமத்திய குற்றச்சாட்டுகளும் அரசு இதற்கு எந்த நடவடிககையும் எடுக்காமல் இருந்தமையும் இந்த அச்சுறுத்தலின் தொடர்ச்சியே.

அண்மையில் வலிகாமம் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் சிலர் சில பாராளுமன்ற உறுப்பினருடன் பஸ்களில் தெல்லிப்பளை சென்று தமது இடங்களை மீளத்தருமாறு கோரி சாத்வீகமான முறையில் தமது கோரிக்கையை முன்வைத்தனர். இவர்கள் வந்த பஸ்கள் மீது மீண்டும் 'இனம் தெரியாதோரால்" கழிவு எண்ணெய் வீசப்பட்டது. இராணுவத்தையும், இராணுவப் புலனாய்வாளரையும் தவிர வெளியார் இங்கு வர வாய்ப்பில்லை.

## அரசுக்கு ஆதரவளிப்போருக்கே உதவிகள், வேலைகள்

ஏதாவது உதவி வேண்டுவோர் அல்லது வேலை வேண்டுவோர் முதலில் அரசின் ஆதரவாளர்களாக மாற வேண்டுமென்ற நியதியுள்ளது. சில மாதங்களுக்கு முன் பணி நிரத்தரமாக்கப்போராடும் தொண்டராசியர் வேலை கேட்டுப்போராடும் பட்டதாரிகளை அரசுக்கு ஆதரவளிக்கும் கட்சியின் ஒரு அமைச்சர் பார்த்து கேட்ட முதல்கேள்வி நீங்கள் கடைசித் தேர்தலில் எங்கள் கட்சிக்கு வாக்களித்தீர்களா? என்பது இவ்வாறு தான் இந்தியாவிலிருந்தும் மற்றும் பல்வேறு நாடுகள் நிறுவனங்களிடமிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்பட்ட பொருட்கள், உபகரணங்கள் போன்றவை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பதிலும் பார்க்க அரச ஆதரவாளர்களுக்கே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன எனபதே உண்மை. உ+ம் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கபபட்ட கடற்றொழிலாளர்க்கென அனுப்பி வைக்கப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளரைச் சென்றடையவில்லை. பயனாளிகள் சிலர் கடற்றொழிலுக்கே செல்வதில்லை.

(தொடரும்....)



# யூபிலி வாழ்த்து

09-07-1962 — 09-07-2012

எம் குலம் விளைந்த முதல் முத்தே
எம் நிலத்தின் என்றும் மாறாத சொத்தே
இறை இயேசுவின் அன்புப் பணிக்காய்
பாதி நூற்றாண்டை பகிர்ந்தாய் ஏழைகளுடன்
பணியின் சிறப்பால் மிளிரும் உம் வாழ்வு
நிலைக்க வேண்டும் இன்னும் பல்லாண்டு
என மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்

அருட்சகோதரி G. கத்தறீன்

ஏழாலை கிழக்கு
ஏழாலை.

தம்பி
யோஜ் அன்ரன்

Add: 66/12


# ஆயரின் பணி சிறக்க


மதவாதம் தலைதூக்கி மன்னன் சங்கிலியன்
மன்னாரைத் தாக்கி மக்களைக் கொலை செய்தான்
இனவாதம் தலைதூக்கி ஆடிக் கலவரங்கள்
இலங்கை வாழ் தமிழரைக் கொன்று குவித்தது

மறை சாட்சிகள் பலரின் ரத்தத்தால் சிவந்த
மன்னார் மண் புனித மண் என்றால் மிகையில்லை
குறை என்ன கண்டார் ஆயரின் குரலில்?
குற்றம் என்ன கண்டார் அவரது செயலில்?

மக்களின் தொண்டுதான் மகேசன் தொண்டென்றால்
மக்களுக்காய் குரல் கொடுத்தல் எப்படித் தவறாகும்?
மந்தைகள் படுந்துயரைக் கண்டும் காணாமல்
இருப்பவன் எப்படி நல் ஆயனாவான்?

வந்தனைக்குரியவர்கள் வாழ்த்துக்குரியவர்கள்
வளமான வாழ்வு அது அவர்களுக்குத் தேவையில்லை
சிந்தனை செய்து உண்மைச் செய்திகளை அறிவியுங்கள்!
நிந்தனை செய்தால் அந்த ஆடுகளும் குரல் கொடுக்கும்

"நவாலியூர் நாயகி"



மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு இரணைப்பாலை பங்கின் மறைக்கல்வி மாணவர்கள் பங்குத்தந்தை அருட்பணி. அருட்செல்வன் அடிகளாருடன் யாழ்ப்பாணம் சுற்றுலா வந்தபோது...

# உலக தொடர்பாடல் தினம் - 2012 -

அன்புமிக்க வாசகர்களே,

2012ம் ஆண்டிற்கான 'உலக தொடர்பாடல் தினம் இவ்வருடம் மே மாதம் 20ம் திகதி உலகளாவிய ரீதியில் நினைவு கூரப்பட்டது. இது திருச்சபையின் 46வது உலக தொடர்பாடல் தினமாக அமைகின்றது. இலங்கையில் மேய்ப்புப் பணி வசதிகளைக் கருத்தில் கொண்டு 2012ம் ஆண்டிற்கான 'உலக தொடர்பாடல் தினம்" யூலை மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ்வருட உலக தொடர்பாடல் தினத்திற்காக திருத்தந்தை அவர்கள் "வார்த்தையும், நிசப்தமும்: மறைத்தூதின் பாதை" என்ற தலைப்பில் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய செய்தியை வெளியிட்டுள்ளார். அதனை தமிழாக்கம் செய்து வெளியிடுகின்றோம். யாழ். மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் யூலை மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகள் உலக தொடர்பாடல் தினத்தை மையப்படுத்தியதாக அமையும்.

**கிறிஸ்துவில் அன்புள்ள, யோ. போல் றொகான், இயக்குனர், சமூகத் தொடர்பு ஆணைக்குழு, யாழ். மறைமாவட்டம்**

# அன்பியங்களே திருச்சபையின் தூண்களாக விளங்குகின்றன

**-சக்கோட்டைப் பங்கின் அன்பிய விழாவில் அருட்பணி. ரவிச்சந்திரன் அடிகள் -**

யாழ் மறைமாவட்ட பங்குகளின் அன்பிய விழாக் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக சக்கோட்டை புனித சவேரியார் ஆலய பங்கின் அன்பிய விழா நிகழ்வுகள் கடந்த 03.06.2012 அன்று சக்கோட்டைப் பங்குத் தந்தை அருட்தந்தை அகஸ்ரின் அடிகளாரின் ஏற்பாட்டில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. 16 வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ள பங்கில் ஒவ்வொரு வலய அன்பியமும் தத்தமது வலயப் பெயரைக் கொண்ட புனிதர்களின் கொடிகளை கரங்களில ஏந்தியவாறு பவனியாக செபமாலையை தியானித்தவர்களாக புனித சவேரியார் ஆலய முன்றலில் ஒனறு கூடினர் மாலை 4.30 மணிக்கு ஒவ்வொரு வலய அன்பியத் தலைவரும் தமக்குரிய கொடிகளை ஏந்திய பின் யாழ் மறைமாவட்ட அன்பிய இணைப்பாளர் அருட்பணி. ரவிச்சந்திரன் அடிகளாரின் தலைமையில் திருப்பலி- ஆரம்பமாகியது. திருப்பலியிலே யாழ் மறைமாவட்டத்தின் பங்குகளின் அன்பிய வளர்ச்சிக்காகவும் அதனுடைய ஒன்றிப்பிற்காகவும் இறைமக்களோடு செபித்த அருட்தந்தை தளர்வுற்று செல்லுகின்ற அன்பியங்களின் செயற்பாடுகள் மீண்டும் புத்துணர்வுடனும் புத்தாக்கத்துடனும் செயற்பட வேண்டுமென்றும் கீழைத்தேய நாடுகளுக்கு அதாவது சாதிய பிறழ்வுகளுக்குள் சிக்கித்தவிக்கின்ற எம்முடைய கிறீஸ்தவ சமுகங்களிற்கு இன்றைய அன்பியங்களுடைய அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தியதோடு அன்பியங்களே திருச்சபையின் தூண்களாக விளங்குகின்றதெனக் குறிப்பிட்டார். தொடர்ந்து கட்டியெழுப்பப்பட்டுள்ள அன்பியங்களின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கான அறைகூவலையும் தன்னுடைய மறையுரையின் ஊடாக விடுவித்தார். திருப்பலியின் நிறைவில் தமது பங்கின் அன்பியக் குழுமங்களின் பகிர்வையும் கூட்டுறவையும் ஒன்றிப்பையும் வெளிப்படுத்த தாம் எடுத்து வந்த உணவுகளை அனைவரும் தமக்கிடையில் அன்போடு பகிர்ந்து உண்டு மகிழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**S. றில்டா - மறையாசிரியர்**

# 22 வருடங்களின் பின்பு சேந்தாங்குளத்தில் புனித அந்தோனியார் திருவிழா

*S.M. வுளோறன்ஸ் - இளவாலை*

வலிகாமப் பிரதேசத்தில், இளவாலை மறைக்கோட்டப் பகுதிக்குள் உள்ளடக்கப்படும் ஆலயங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாக விளங்கும் சிற்றாலயமே சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலயமாகும்.

முப்பதாண்டுப் போர்க் கால சூழ்நிலையில் கடந்த 22 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலய பிரதேசமாக இப்பகுதி அமையப் பெற்றமை வெள்ளிடைமலை. 1990ஆம் ஆண்டிலேயே இப்பகுதிமக்கள் பெரும் துயர நிலைகளைத் தாங்கி இடம் பெயர்ந்து இன்னல்கள் மிகுந்த வாழ்க்கை முறைகளைத் தமதாக்கி எதிர் நீச்சல் போட்டமை வரலாற்றில மறைக்க முடியாதவை.

எனினும் இறையருள் பேற்றால் கிடைக்கப் பெற்ற மீள் குடியேற்ற நடவடிக்கை மூலம் தமது சொந்த மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் மீள் குடியேற்றப்பட்ட போதிலும் அவர்களுக்கே உரித்தான முழு மனித உரிமைகளோ, தகுந்த வாழ்வாதார வசதிகளோ, அற்ற சூழ்நிலையில் தான் கடற்கரையை அண்டிய இப்பகுதியில் தமது வாழ்க்கைப் படகைச் செலுத்துகின்றனர். மேலும் இவர்களது ஆன்மீக வாழ்வை மேம்படுத்தக் கூடிய வகையில் ஆலயம் மேம்படுத்தப்படாவிடினும் தமது விசுவாச வாழ்வில் உறுதியாய் இருப்பது கண்கூடு.

இந்நிலையில் தான் இப்பகுதி மக்களின் பாதுகாவலராக விளங்கும் புனித அந்தோனியார் ஆலயமும் அதன் சுற்றுச் சூழலும் ஆலய வழிபாடுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலும், பங்குத்தந்தையினதும் ஆலயச் சூழல் வாழ் மக்களினதும் ஒத்துழைப்புடன் சிறுமையிலும், பெருமை காணும் வகையில் 22 வருடங்களின் பின்பு 13-06-2012 அன்று திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டமை வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சமாகும்.

மேற்படி திருவிழா திருப்பலியானது அருட்திரு. H.V. பெனடிக்ற் (OFM) அவர்களால் நிறைவேற்றப்பட்டது. அவர் தமது மறையுரையில் புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாற்றை இரத்தினச்சுருக்கமாக எடுத்துரைத்து அவரில் துலங்கிய சூழ்நிலை செபவாழ்வே இயேசுவுடனான நெருங்கிய நட்புறவையும், வல்லமையையும் கொண்டு விளங்கக் காரணமாக அமைந்தது. எனவே கிறிஸ்தவ வாழ்வில் முகம் கொடுக்கும் சவால்களை வெற்றி கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம் பெற்று விழா இனிதே நிறைவுற்றது. எளிமையிலும் பெருமை காணும் வகையில் இவ்விழா அமைந்தது.


# மரண அறிவித்தல்



**வவுனியாவைச் சேர்ந்த திருமதி மேரி றெஜினா பிரான்சிஸ் (அழகம்மா)**

இவர் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து முதலியார் வேந்தக்கோன்,அக்னெஸ்அம்மாவின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற மிருசுவிலைச் சேர்ந்த லிகோரி பிரான்சிஸ் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியாரும், ஜெயராஜா, பத்மினி, விமலா, றஜனி, றாகினி, யோகினி, சுலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருட். சகோதரி (தி.கு.க), பொன்றோஸ் மரியாம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான துரைராஜா, பொன்ராஜா, கிறேஸ், இராஜக்கோன், செபரத்தினம், ஆகியோரின் அன்புச்சகோதரியும், பிராங்கா, மைக்கல், வெஸ்லி, தவராஜா, அருமைதாஸ், வலன்ரைன், தோமஸ், ஆகியோரின் அன்பு மாமியாரும், சூரியா, மதி, யாழினி, அன்ரனி, சூசானா, நிறோசன், நிலோமா, றமணி, றதினி, யோசவ், நீக்கலஸ், பிரான்சிஸ் ஆகியோரின் அன்பு பேத்தியாரும், றைலீனின் அன்பு பூட்டியும், முத்து துரைராஜா, B.J.இராஜா, காலஞ்சென்றவர்களான அருட்சகோதரர். பத்திநாதர் (CR), பாக்கியநாதர், திரேசாமலர், செசீலியா, மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவர். அன்னார் வைகாசி 29, 2012ல் இறைபதம் அடைந்து விட்டார். ஆனி 13, 2012 மதியம் 12 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மரியாள் சேமக்காலை, வெம்லி, லண்டனில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Add: 67/12


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 860, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.